
# விதைத்தேன் சிறுகவிதை.....





ஆ. திலீபன்

# விதைத்தேன் சிறுகவிதை



ஆ. திலீபன்

| | | |
|---|---|---|
| நூல் | : | விதைத்தேன் சிறுகவிதை |
| தலைப்பு | : | விதைத்தேன் சிறுகவிதை |
| முதற் பதிப்பு | : | ஜனவரி 18 |
| ஆசிரியர் | : | ஆ. திலீபன்<br>ஆச்சிரமவீதி,<br>இணுவில் வடகிழக்கு.<br>0779598242 |
| பதிப்புரிமை | : | ஆசிரியருக்கே |
| வெளியீடு | : | ஆசிரியர் |
| கணனிப் பதிப்பு | : | திருமதி. சி. அனுஷியா |
| நூல் அச்சமைப்பு | : | கபிஷ் பிறிண்டேர்ஸ்,<br>பலாலி றோட், டிப்போ அருகாமை<br>கோண்டாவில்.<br>தொ.பேசி : 0779234511,<br>0769284772 |
| பக்கம் | : | 26 |
| விலை | : | 110 ரூபா |

# முன்னுரை

ஆசீர்வாதம் திலீபன் ஆகிய நான் தமிழுக்கு தொண்டாற்ற வேண்டும் என்ற நோக்கிலும் எனது மொழி தாய் தமிழ் மொழி என்ற ரீதியிலும் "விதைத்தேன் சிறுகவிதை" எனும் புத்தகத்தை தமிழ் ஆர்வமுள்ள வாசகர்கள் அனைவருக்கும் இந்த கவிதை புத்தகத்தை எழுத முனைப்பட்டேன். இந்தப் புத்தகத்தை வாசிக்கும் வாசகர்கள் வாசிக்கவும், ஆசீர்வதிக்கப்படவும் மென்மேலும் இவ்வாறான புத்தகங்களை எழுத என்னை ஊக்குவிக்குமாறும் உங்கள் ஒத்துழைப்புக்களை வழக்குவீர்கள் எனவும் நம்புகின்றேன்.

மேலும் இந் நூலினை அழகுற அச்சிட்டு தந்த கபிஷ் பிறிண்டேர்ஸினருக்கும், எனது கவிதை ஆர்வத்தை மேலும் விருத்தி செய்யும் பொருட்டு உதவும் கவிதை ஆர்வலர் அனைவரது ஒத்துழைப்பையும் எதிர்பார்க்கின்றேன்.

நன்றி

தொகுப்பு:

**ஆ. திலீபன்**

# ஆசியுரை

ஆசீர்வாதம் புஸ்பம் ஆகிய நான் எனது மகனான ஆசீர்வாதம் திலீபனை நினைத்து சந்தோஷப்படுகின்றேன். "ஈன்ற பொழுதில் தன் மகனை சான்றோன் என கேட்ட தாய்" என்ற திருவள்ளுவரின் கூற்றுக்கிணங்க எனது மகன் இந்த சமுதாயத்தில் என்ன செய்வான் என நினைத்து எதிர்பார்த்த வேளையில் எனது மகன் புத்தாக்க ஜீவியாக தமிழ்த் தாய்க்கு தொண்டாற்றுவதில் நான் மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன். எனது மகன் எழுதிய அனைத்துக் கவிதைகளையும் யேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஆசீர்வதிக்கிறேன். எனது மகன் இன்னும் உயர்ந்த நிலை வரவும் தமிழுக்கு மாத்திரமல்ல பல மொழியில் தேர்ச்சி பெற்று அதிலும் சேவையாற்றவும், இதன் மூலம் உலகத்தில் பொன்னும் பொருளும் பணமும் ஈட்ட இறைவன் மூலம் வாழ்த்துகின்றேன். இந் நூல் புகழ் பெறட்டும்.

நன்றி

இங்ஙனம்

**ஆசீர்வாதம் புஸ்பம்**

## ஆலோசனை

ஏர்பூட்டி உழைத்த தந்தை
இவனுக்காய் கஷ்டப்பட
தறுதலையாக திரிந்தவன்
தனக்கென வாழ்க்கையை அமைத்தான்
சிறுதளவும் குடும்பம் - எது
என தெரியாதவன்
உள் உணர்வால் பாதிக்கப்பட்டான்
உள நல பிரிவில்
இவனுக்கோ ஆலோசனை

## முயற்சி செய்

ஏழையாய் பிறந்தது நீ செய்த குற்றம் அல்ல
ஏழையாய் வாழ்வதுதான் நீ செய்த குற்றம்
எட்டு திசையும் உனக்குச் சொந்தம்
ஏட்டை நீ தொட்டதில்லை
ஏன் கவலை
தன்னம்பிக்கை உனக்கு உண்டு
தட்டிக் கொடுக்க ஆள் உண்டு
ஏணியில் உன் கால் வைத்து
ஏற முயற்சி செய்.

# பாமர சமூகத்துவம் இது

பட்டப் படிப்பு எல்லாம்
பட்டணத்து வாசல்வரை
பட்டிணத்து சொல்லும்
பண்பாடும் இங்கேதான்
பாமர மக்களின் எண்ணத்திலோ
பண்பாட்டிலோ நீ கலக்கமுடியாது
சொல் மருவி
சொல்லுக்கே இசைபோட்டு
கண் அசைத்து
கண்களால் பேசும்
கள்ளம் வைத்து வந்தவரை
கண்டு பிடிக்கும்
பாமர சமூகத்துவம் இது.

## சந்தர்ப்பத்தை உருவாக்கு

புதுமை படைக்கவா
படைப்பாளியாக
பகுத்தறிவு உனக்கு வேண்டும்
பகுத்தாய்வு செய்ய
பார் எங்கும் செல்ல வேண்டும்
பாராட்டு நீ பெற
சந்தர்ப்பத்துக்காய் காக்காதே
சுதந்திரத்தை உருவாக்க வா
சூழல் சமநிலையை குலைக்காதே
சந்தர்ப்பத்தை உருவாக்கு

## சூழ்ச்சி

உழைத்தவன் இங்கு இல்லை
உறிஞ்சி இழுத்தவன் மனிதன்
பட்டினிபோட்டது பாட்டாளிவர்க்கம்
பசி போக்க பல ஸ்தாபனம்
உழைப்பதற்கு நொண்டிச்சாட்டு
உழைத்தவனிடம் வசூல் பறிக்க
ஒரு கூட்டம்
வாக்கு எடுக்க பல கட்சி
வாழ்வை அழிக்க ஒரு சூழ்ச்சி

## வடுவை மாற்றுமா?

கடல் அலை அடிக்கலாம்

காற்று சுழற்றி அடிக்கலாம்

கட்டிடம் கட்டி

நாகரீகம் மாறலாம்

நாக்கில் தவளும் - மொழியும்

நாடுகளில் நடக்கும் கண்டுபிடிப்பும்

நாவல் சூட்ட வடுவை மாற்றுமா?

## ஞானம் புறந்திடுமா?

எண்ணி எண்ணி

எப்போ முடிப்போம்

தொட்டணை துலங்க வேண்டும்

நண்டு வரையும் சித்திரமும்

அலையால் வரும் ஓவியமும்

சேவல் கூவி விடிந்திடுமா

சேதாரம் வரும் முன்

மனிதனுக்கு ஞானம் பிறக்குமா?

## ஒரு நாள் நின்றாள்

மண் உன்னை அழைத்தது
மனங்கள் உன்னை நேசிக்கமுன்
கேட்க வேண்டும் அவள்பட்ட - வேதனையை
புகழிடம் தேடும் மனிதா
புலியிடம் தப்பினாலும்
ஒழுக்கிடம் தப்ப முடியாது
ஓடும் பூமியும்
ஓடும் மனிதனும்
ஒரு நாளும் நின்றதில்லை
ஒரு நாள் நின்றாள்......!

## உனக்கு இருக்கும்

திருத்திட வேண்டாம்
திருந்திட வேண்டும்
திரும்பி பார்க்க வைக்கணும்
திருந்தமாய் நீ இருந்தால்
திருவருள் துணை
உனக்கு இருந்தாள்
தினம் தினம்
அவன் அருள்
உனக்கு இருக்கும்

## எதிர்பார்க்காதே

விதைகள் விதைத்தால்தான்
விழுந்து முளைக்கும்
விதைகள் பாவம் என்று
விதைக்காத விதைகள்
முளைப்பதில்லை
என்பது போல
பிழை என்று விதைக்காமல்
இருக்காதே இருந்தால்
அதனை அறுக்க முடியாது
பலன் எதிர்பார்க்க முடியாது.

## பண்டிதர் ஆகலாம்


அலைகள் கரைசேரலாம்
சேர்ந்த அலைகள்
இசையாகலாம்
கற்றவர் பண்டிதர் ஆகலாம்
கற்றது கையளவு
கல்லாதது உலகளவு என்றால்
ஒரு சோற்றுக்குள்
பெரிய பூசணியை மறைப்பது போல்
பண்டிதர் ஆகலாம்.

## நாட்டுக்கு உதவுமா?

தென்றல் வீசும்
தேன் குடிக்கும் வண்டு
தொட்டால் நிற்குமா?
தண்டு காக்க
பூக்கள் பூக்க
பூச்சிகள் பறக்குமா?
புத்தக பூச்சியும்
பட்டாம் பூச்சியும்
நெடு நாள் வாழுமா?
நட்டம்பட்ட கடையும்
நாட்டம் இல்லா வீடும்
நாட்டுக்கு உதவுமா?

## இடித்தாய்

கண்கள் இருக்கே
கண்ணாடி அணிகிறவனே
முன்னாடி தெரியாத
முனியாண்டி மீது - ஏன்
இடித்தாய்.



வரைந்தவர் : ஆ. திலீபன்

## கறுந்தாயா?

பட்ட வெய்யில் சுட்டதையா
பங்குனி வெய்யில் அல்ல
பட்டவுடன் கறுத்தாயா?

## இன்று

பிறப்பது ஒருமுறை
இறப்பது பலமுறை
இணையற்ற உலகில்
நிம்மதி தேடி
நாதியற்ற நிலைதான்
இன்று

## தொடருவோம்


தொலைக்காட்சி
தொல்லைக்காட்சி
தொலைத்தவரைதினம்
தொடர வைப்பது
தொடர்பற்ற மூலதனம்
தொடருவோம்.

## கரிக்கிவிடும் தேசிக்காய்

உச்சத்தில் இருந்தோர்
உணவுக்கே அச்சமில்லை
உயர்வுக்காய்
உழைப்போர்
உண்மையுள் எதுவும் இல்லை
கிள்ளிக் கொடுக்க மனம் இல்லை
தட்டிப் பறிக்க குணம் இருக்கு
கண் திஸ்ரி என்று
கரிக்கிவிடும் தேசிக்காய்

## கடலே

இருட்டோடே
கடலிடம் செல்லுவான்
கதிரவன் தோன்றியபின்
வீட்டோடே கிடப்பான்
கட்டிய மனைவியாள்
இவன் பேச்சில் இருப்பாள்
கடலே இவன் வளம்
கஷ்டம் என்பது இவனுக்கு - இல்லை
கஷ்டத்தை உணர்திய
கடலே.



வரைந்தவர் : ஆ. திலீபன்

## தீப்பிளம்பே

சுடர் ஒளியே
பாதாளம் வரை
உன் கதிரே
ஞாயிறுவே
திங்கள் மீது
உன் காதலை
மாலையானதும்
உன் கருணையின் வடிவே
இரவெல்லாம்
திங்களின் வடிவை
திலகவைக்கும்
தீப்பிளம்பே

## என்ன?

வானத்து அழகிடமே
கண்சிமிட்டும் நட்சத்திரமே
வானத்தை நோக்கி
காண்கின்ற மனிதனிடம்
என்ன சொன்னாய்
அவன் எதிர்காலம் தான்
என்ன?

## ஆசையில்

அண்ணா!
என்ன?
காப்பியில் ஈ இருக்கிறது
பின்ன என்ன
நீ தந்த ஏழு ரூபாய்க்கு
தமன்னா திரிஷாவா ஆடுவாங்க
சுத்தமில்லையே
சுகமில்லாத வாழ்க்கையில்
சத்தமில்லையே
பணத்தின் மேல் உள்ள
ஆசையில்

## போற்று

இயற்கையின்
மிகு எழிலில்
இறைவனின்
கை வண்ணம்
ஈகை அளித்தவன் ஆவான்
இலவசமாய் பெற்றவர் நாம்
துன்பத்தில் இறைவனை நாடு
இன்பத்தில்
அவரது நாமத்தைப்
போற்று.

## சேவை

மூன்று கல்வைத்து
மூட்டிய விரகில்
பசியாற உண்பதற்காக
சமைக்கின்ற வேதனையை
மூவுலகிற்கு யார் எடுத்து சொல்வார்
பணத்திற்காக அல்ல
பாசத்திற்காக செய்யும்
சேவை.

## ஒரு சிலரே

பார் எங்கும்
பரந்து பட்ட
இனக்குழுக்கள்
அனத்துக்கு இனம்
வேறுபட்ட மொழிகள்
இனத்துக்காய் வாழ்ந்தவர்கள்
பல கோடிகள்
மனிதனுக்காய் வாழ்ந்தவர்கள்
ஒரு சிலரே.

## காப்பகமே மிஞ்சம்

கற்க வேண்டும் என்ற
எண்ணம்
கற்றதனை வைத்து
கரைகாண வேண்டும் என்ற
எண்ணம்
கரையை அடைத்தால்
கல்யாண பந்தத்தில்
இணைய வேண்டும் என்ற - ஆசை
கார்த்திருந்தோம் காலம் போய்
காப்பகமே மிஞ்சம்

## இழுந்ததே


வீடு விட்டு
காடு விட்டு
கடல் கடந்து
நாடு விட்டு
நாடு போய்
அலைந்தேன்
ஊர்மண்ணே
என்னை
இழுத்ததே

## வாழக்கை இருக்கும் வரை

வாழ்நாள் எல்லாம்
தேடல் என்பது இருக்கும்
கூடல் என்பது
தொலைந்து விட்டால்
காலம் எல்லாம்
கவலை இல்லை
வாழ்க்கை இருக்கும் வரை

## சுமந்தான்

கூடியிருந்து கதைப்பது
சுமைகள் எல்லாம் குறைப்பதற்கு
வந்தவன் சுமந்து செல்வதற்கல்ல
அவனுக்கு தெரிந்தது எப்படி
இவன் அல்லவா
சுமந்தான்



வரைந்தவர் : ஆ. திலீபன்

## பளபளக்க

பட்டையை தீட்டினேன்
வைரமாய் வருவதற்கு
வைரங்கள் எண்ணினேன்
வரங்கள் கொடுக்க
பளிச்சிட்ட வைரம்
பளபளக்க

## நிற்பார்

துளிதுளியாய் வருவது
பாரிய வழிகள் உருவாக்க
துரிதமாக செல்வது
ஆபத்தினை விளவிக்க

## தார் வண்டி

வண்டி வண்டி புகை வண்டி
புதியாய் புறப்படும்
யாழ் வண்டி
யார் திறந்து வைத்தார்
தனி வண்டி
தண்டாவாளம் போட்டது
தார்வண்டி.

## எண்ணிப்பாரு

கெய் கெய்யா
ஓடுகிற மாடு
ஒற்றுமையாய் இரண்டுமாடு
இரண்டில் ஒன்று பிரித்தால்
உன் வாழ்க்கை எண்ணிப்பாரு.

## தாயே

அன்பு உள்ளமே
அன்னையின் பிறப்பிடமே
அணைக்கும் கரமே
ஆராரோ ஆராரோ
பாட்டுப்பாடி
பக்குவமாய்
பாதுகாப்புதரும்
தாயே!.

## காரணம்

நட்புக்கு

நண்பனே

நன்றியுள்ளமே

நாம் நிலைத்து நிற்பதற்கு

நம் நட்பே

காரணம்.

## மறுமலர்ச்சியாகும்

கனவெல்லாம்

ஒரு நாள்

நிஜமாகும்


பென்சிலின்

ஓவியம்

ஒரு நாள்

நகர

மறுமலர்ச்சியாகும்.



வரைந்தவர் : ஆ. திலீபன்

## வலயமே

இரத்தினத்தின் தீபமே
இந்து சமுத்திரத்தின்மையமே
இயற்கை பாதுகாப்பு வலயமே
இலங்கையிடம் பல நாடுகள்
கெஞ்சுகின்ற அந்த வலயமே.

## வாழ்க்கை

பஸ்சில் போகும்
பல கோடி மக்களே
பயன் ஏதும் இல்லை
பல மயில் போகலாம்
பாருங்கோ
பல பேரின்
வாழ்க்கை இது நானுங்கோ

**கபிஷ் பிறிண்டேர்ஸ்,**
பலாலி றோட், டிப்போ அருகாமை கோண்டாவில்.
தொ.பேசி : 0779234511, 0769284772